










We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)
## பிப்ரவரி - 2019

*We Are Here..!! To Guide You..!!*










# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (Current Affairs)

## பிப்ரவரி - 06.02.2019

We Shine Academy™
guiding you to get through


Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தமிழக நிகழ்வுகள்
- இந்திய நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- அறிவியல் & தொழில்நுட்பம்
- நியமனங்கள்
- பொருளாதார நிகழ்வுகள்








# தமிழக நிகழ்வுகள்

- **தமிழகத்தில்** அனைத்து அரசு மருத்துவமனைகளில் பிரசவிக்கும் தாய்மார்கள் மற்றும் சேய்களை அவர்களது இல்லத்திற்கு பாதுகாப்பாக அழைத்துச் செல்வதற்கான **"102 – தாய் - சேய் நல வாகன சேவை"** திட்டத்தின் கீழ் **15 புதிய வாகன சேவை** தொடங்கப்பட்டுள்ளது.
    - 102 – தாய் - சேய் நல வாகன திட்டம் 2013ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

# இந்திய நிகழ்வுகள்

- விவசாயிகளுடைய குழந்தைகளின் கல்வியை மேம்படுத்துவதற்காக ஊக்கத் தொகை வழங்கும் திட்டமான **"கலியா சக்ரவிருதி யோஜனா"** (Kalia Chhatravritti Yojana) என்னும் திட்டத்தை ஒடிசா மாநில அரசு தொடங்கியுள்ளது.

- கொல்கத்தாவிற்கு அருகே உள்ள மாயாபூரில் உலக பாரம்பரிய மையம் **(WHC – World Heritage Centre, Mayapur)** அமையவுள்ளது.
    - இதில் 45 நாடுகளின் **'ஆன்மீக முகாம்கள்'** (Spiritual Camps) அமையவுள்ளது.

- ஆயூஷ்மான் பாரத் திட்டத்தில் ஆயூஷ் சேவைகளை ஒருங்கிணைப்பதற்காக, **மாநில சுகாதார அமைச்சர்கள் மாநாடு புதுடெல்லியில் பிப்ரவரி 6** (இன்று) நடைபெற உள்ளது.
    - இம்மாநாட்டில் அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் சுகாதார மற்றும் ஆயுஷ் அமைச்சர்கள் பங்கு பெற உள்ளனர்.
    - தேசிய சுகாதார பாதுகாப்பு திட்டமான **ஆயூஷ்மான் பாரத் திட்டம் செப்டம்பர் 23, 2018** அன்று தொடங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

We Shine Academy ™

## விளையாட்டு நிகழ்வுகள்

- ரஷ்யாவின் செயின்ட் **பீட்டர்ஸ்பர்க** நகரில் நடைபெற்ற 2019 – WTA (Women's Tennis Association) டென்னிஸ் போட்டியில் நெதர்லாந்து வீராங்கனை **கிக்கி பெர்ட்டன்ஸ்** (Kiki Bertens) சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

## அறிவியல் & தொழில்நுட்பம்

- சர்.சி.வி. ராமன் கண்டுபிடிப்பை அடிப்படையாகக் கொண்டு, சுற்றுச்சூழலுக்கு பாதிப்பில்லாத வகையில் கேரட்டிலிருந்து சீரான **லேசர் கதிரை** (Random Laser Ray), **சென்னை ஐ.ஐ.டி** (Chennai – IIT) ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
  - **காய்கறியிலிருந்து லேசர் கதிர் உற்பத்தி செய்யப்படுவது** உலகிலேயே இதுதான் முதல்முறை.

- மாணவர்கள் தங்கள் **கணினி அல்லது செல்பேசி மூலம்** போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சிகளையும், மாதிரி தேர்வுகளையும் மேற்கொள்ளும் வகையில் **தேசிய சோதனை நிறுவனம்** (National Testing Agency), **"NTA Students App"** என்ற புதிய மொபைல் செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது.

We Shine Academy™

## நியமனங்கள்

- மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகமானது, **அர்ஜென்டினாவின் இந்தியத் தூதராக பணியாற்றி வரும் சஞ்சீவ் ரஞ்சன்** என்பவரை **கொலம்பியக்** குடியரசின் **புதிய தூதராக** நியமித்துள்ளது.

## பொருளாதார நிகழ்வுகள்

- விவசாயத்திற்கும் அது சார்ந்த நடவடிக்கைகளுக்கும் பயன்படும் வகையில் எவ்வித பிணையையும் இல்லாத, **"கிசான் சுவிதா கடன்"** என்ற திட்டத்தை **உஜ்ஜீவன் சிறு நிதியியல் வங்கி** (Ujjivan Small Finance Bank) தொடங்கியுள்ளது.